**வரையறுத்த தெதுறு ஓயா மினி கைட்றோபவர் (தனியார்) கம்பனி - 2022**

---

**1. நிதிக்கூற்றுகள்**

**1.1 அபிப்பிராயம்**

வரையறுத்த தெதுறு ஓயா மினி கைட்றோபவர் (தனியார்) கம்பனியின் (“கம்பனி”) 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான இலாப நட்டக்கூற்று, ஏனைய விரிவான வருமானக் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2022 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு அறிக்கையிடப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

கம்பனி 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை கணக்கீட்டு நியமங்கள் இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

**1.2 அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அவ் நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பகுதியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

**1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்**

நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கிணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, கம்பனி தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது கம்பனி கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

கம்பனி நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் பிரிவின் பிரகாரம் கம்பனி வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு கம்பனி அதன்

அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புகள்

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்து நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்,

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது கூட்டுச்சதி, கள்ளத்தனம், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி கம்பனியின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு முகாமைத்துவத்தின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய தொடர்ந்து செயற்படுவதற்கு கம்பனிக்கு உள்ள ஆற்றல் தொடர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவிற்குவருதல். பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், அல்லது எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைப்பதற்கு அவ்வாறான வெளிப்படுத்தல்கள் போதியனவாக காணப்படாதிருக்கையில்,

நிதிக்கூற்றுக்களிலுள்ள வெளிப்படுத்தல்களுடன் தொடர்புபட்டுள்ள எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டும். எனது கணக்காய்வு அறிக்கைத் திகதி வரையிலும் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகள் எனது முடிவுகளிற்கு அடிப்படையாகக் காணப்படுகின்றன. எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் கம்பனியின் தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்கு சாத்தியமானதாகவும் அவசியமானதுமானதாகவும் கணக்காய்வின் நோக்கெல்லை விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

- கம்பனி செயற்பாடுகளை தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யக்கூடியவாறான தகவல்களை சமர்ப்பிக்கும் நோக்கில் அமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதுமானதாகவும் வடிவமைக்கப்பட்டிருந்தனவா என்பதுடன் அத்தகைய முறைமைகள், நடைமுறைகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான செயற்பாட்டில் உள்ளனவா என்பதும்,

- கம்பனி ஆளுகை சபையால் வழங்கப்பட்ட பொருத்தமான எழுத்துமூலமான சட்டம் அல்லது ஏனைய பொதுவான அல்லது விசேட பணிப்புரைகளுடன் கம்பனி இணங்கியிருந்ததா என்பதும்,

- கம்பனி அதன் அதிகாரங்கள், தொழிற்பாடுகள் மற்றும் கடமைகளின் பிரகாரம் செயற்பட்டிருந்தனவா என்பதும், மற்றும்

- கம்பனி வளங்கள் கால வரையறைகளினுள்ளேயும் பொருத்தமான சட்டங்களிற்கிணங்கவும் சிக்கனமாகவும் வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும் ஆகும்.

## 1.5 நிதிக்கூற்றுக்களின் தயாரிப்பு மீதான கணக்காய்வு அவதானிப்பகள்

### 1.5.1 செலுத்த வேண்டிய கணக்குகள்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரைகள் |
|---|---|---|
| 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறு 2021 மற்றும் 2022 ஆம் ஆண்டுகளிற்காக நீர்ப்பாசன திணைக்களத்திற்கு செலுத்த வேண்டிய ரூபா 27.18 மில்லியன் தொகையான இறையிலாதன கட்டணம் கம்பனியால் தீர்ப்பனவு செய்யப்பட்டிருக்கவில்லை. | நீர்ப்பாசன திணைக்களத்திற்கான இறையிலாதன கட்டணம் இலங்கை மின்சார சபையிடமிருந்து கிடைத்த நிதிகளிலிருந்து விரைவில் தீர்ப்பனவு செய்யப்படும் | செலுத்த வேண்டிய மீதிகளை தீர்ப்பனவு செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

**1.6 வரிப் பிரமாணங்களுடன் இணங்காமை**

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் போன்றவற்றிற்காக தொடர்பு | இணங்காமை | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரைகள் |
|---|---|---|---|
| (அ) 2022 இன் 45 ஆம் இலக்க உள்நாட்டு இறைவரி அதிகாரச் சட்டத்தின் (திருத்திய) 33.3(ii) ஆம் பிரிவு மற்றும் 2022 திசெம்பர் 15 ஆந் திகதிய PN/IT/2022-03 ஆம் இலக்க வரி செலுத்துவோருக்கான அறிவித்தலின் 3 ஆம் பந்தி | வருமான வரிக் கணிப்பீடு சரிசம வீத அடிப்படையில் தயாரிக்கப்பட வேண்டியதுடன் முதல் 6 மாதங்களிற்காக 24 சதவீதமும் மிகுதி 6 மாதங்களிற்காக 30 சதவீதமும் பிரயோகிக்கப்பட வேண்டும். எவ்வாறாயினும், கம்பனியானது 2022 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்காக 24 சதவீதத்தை பிரயோகித்து வருமான வரிக் கணிப்பீட்டை தயாரித்திருந்தது. | இது பரிசோதிக்கப்பட்டு திருத்தம் செய்யப்படும் | உள்நாட்டு இறைவரி அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளுடன் இணங்கியொழுக வேண்டும். |
| (ஆ) 2017 இன் 24 ஆம் இலக்க உள்நாட்டு இறைவரி அதிகாரச் சட்டத்தின் 126 ஆம் பிரிவு | வரி மதிப்பீட்டு ஆண்டு முடிவடைந்த பின்னர் நவம்பர் 30 அல்லது அதற்கு முன்னர் உள்நாட்டு இறைவரி திணைக்களத்திற்கு பட்டியலுடன் சேர்த்து முறையாக பூர்த்தி செய்யப்பட்ட அறிக்கை மற்றும் வேறு ஏதாவது வேண்டப்பட்ட ஆவணங்களும் சமர்ப்பிக்கப்பட வேண்டும். எவ்வாறாயினும், கம்பனியானது 2017/2018 வரி மதிப்பீட்டு ஆண்டிற்கான அறிகையை தயாரித்திருக்கவில்லை. | வருமான வரி (IT) அறிக்கை நிரப்புதலின் பின்னூட்டல் பூர்த்தி செய்திருந்ததுடன் IRD பேரம் பேசலுடன் IT சரிசெல்தல்களை தொடங்கப்படும். | -மேற்படி- |

## 2. நிதி மீளாய்வு

### 2.1. நிதிசார் விளைவுகள்

மீளாய்வாண்டின் செயற்பாட்டு விளைவு ரூபா 46,356,143 ஆன இலாமாக இருந்ததுடன் நேரொத்த முன்னைய ஆண்டின் இலாபம் ரூபா 41,383,445 ஆகும். ஆகவே, நிதிசார் விளைவில் ரூபா 4,972,698 தொகையான முன்னேற்றம் அவதானிக்கப்பட்டது. மீளாய்வாண்டின் போது ரூபா 11,372,373 ஆல் வருமானம் அதிகரித்தமையே இந்த முன்னேற்றத்திற்கான காரணமாக உள்ளது.

## 3. கணக்களிபொறுப்பும் நல்லாளுகையும்

### 3.1 வருடாந்த செலல்நடவடிக்கை திட்டமும் பாதீடும்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரைகள் |
|---|---|---|
| 2021 நவம்ர் 16 ஆந் திகதிய அரச உடமையாக்கப்பட்ட முயற்சிகளிற்கான கூட்டு ஆளுகைகள் மீதான வழிகாட்டலின் 2.3 ஆம் பிரிவின் பிரகாரம் துணைக் கம்பனிகளானது தாய் கம்பனிக்கு வருடாந்த செயல் நடவடிக்கை திட்டத்துடன் சேர்த்து இறுதியாக்கப்பட்ட உபாய திட்டங்கள் சமர்ப்பிக்க வெண்டும். ஏவ்வாறாயினும், தாய் கம்பனியான வரையறுக்கப்பட்ட ஶ்ரீ லங்கா எனர்ஜீஸ் (தனியார்) கம்பனிக்கு செயல் நடவடிக்கை திட்ம் மற்றும் வருடாந்த பாதீடு என்பவற்றினை தயாரிக்கப்பட்டு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | செயல் நடவடிக்கை திட்டம் பூர்த்தியாக்கல் செயற்பாட்டில் உள்ளன.<br><br>2022 ஆம் ஆண்டிற்கான பாதீடு அதே பாதீட்டின் பகுதியாக இருந்த தாய்கம்பனி மற்றும் வரையறுக்கப்பட்ட தெதுறு ஓயா மினி கைட்றோ (தனியார்) கம்பனியை கொண்ட ஶ்ரீ லங்கா எனர்ஜீஸிற்காக தயாரிக்கப்பட்டு BOD அனுமதிக்காக சமர்ப்பிக்கப்பட்டது | அரச உடமையாக்கப்பட்ட முயற்சிகளிற்கான கூட்டு ஆளுகைகள் மீதான வழிகாட்டலிலுள்ள ஏற்பாடுகளுடன் இணங்கியொழுக வேண்டும். |